

விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் சோழிங்கநல்லூர் அரவிந்த் ரமேஷ் தலைமையில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் கணபதி மற்றும் சென்னை மாநகராட்சி துணை மேயர் மகேஷ் குமார் முன்னிலையில் தி.மு.க. மாநில வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் வாக்கு சேகரித்த போது எடுத்த படம். அருகில் மண்டல குழுத் தலைவர் சேர்மன் கிருஷ்ணமூர்த்தி, தென் சென்னை மாவட்ட கழக அவைத்தலைவர் குணசேகரன், மாவட்ட பொருளாளர் வேளச்சேரி பாஸ்கர் எம்.சி. மற்றும் பலர் உள்ளனர்.



விக்கிரவாண்டி பேரூராட்சியில் உள்ள பள்ளிவாசலில் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி தலைமையில் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கே.எஸ்.மஸ்தான், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வே.கணேசன் ஆகியோர் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்கள். மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில சிறுபான்மையினர் அணி செயலாளர் சுபேர் கான், பேரூராட்சி தலைவர் அப்துல் சலாம், நகர செயலாளர்கள் இரா.சக்கரை, நயினா முகமது மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.

### விக்கிரவாண்டி தொகுதியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூறாவளி பிரச்சாரம்!

### விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், ஜூலை 6-

விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தல் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா (எ) சிவசண்முகம் அவர்களை ஆதரித்து கழக இளைஞர் அணிச் செயலாளர் , இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கீழ்க்கண்ட இடங்களில் கழக துணை பொதுச் செயலாளர் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி ஆகியோர் தலைமையில் 07-07-2024



ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4 மணிக்கு திருவாமாத்தூர், மாலை 5 மணிக்கு காணை, மாலை 6 மணிக்கு பனமலைப் பேட்டை, இரவு 7 மணிக்கு அன்னியூர் மற்றும் 8-07-2024 திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தும்பூர், காலை 9 மணிக்கு நேமூர் , மாலை 5 மணிக்கு விக்கிரவாண்டி பேரூராட்சி ஆகிய பகுதிகளில் வாக்குகளைச் சேகரிக்க உள்ளார்,

அவ்வமயம் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் மற்றும் இந்தியா கூட்டணிகளான இந்திய தேசிய காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி, திராவிடர் கழகம், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி, மக்கள் நீதி மையம், மற்றும் இந்திய கூட்டணிக்கு ஆதரவளித்துள்ள அனைத்து கட்சிகளின் நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளின் நிர்வாகிகள், இளைஞர்கள், மாணவர்கள், பொது மக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி தெரிவித்துள்ளார்.

### ரூ.250 கோடி முதலீட்டில்

# சென்னையில் உலகளாவிய புத்தாக்க மையம்!

### 4 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு!

சென்னை, ஜூலை 6-

சென்னையில் 250 கோடி ரூபாய் முதலீட்டில், உலகளாவிய புத்தாக்க மற்றும் தொழில்நுட்ப மையத்தை அஸ்ட்ரா ஜெனிகா நிறுவனம் அமைத்துள்ளது. இதன் மூலம் நான்காயிரம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட இருக்கின்றன.

மருத்துவத் துறையில் செயல்பட்டு வரும் அஸ்ட்ரா ஜெனிகா நிறுவனம், சென்னை தரமணியில் 250 கோடி ரூபாய் முதலீட்டில், உலகளாவிய புத்தாக்க மற்றும் தொழில்நுட்ப மையம் அமைத்துள்ளது. இதனை தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா திறந்து வைத்தார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்ட அவர், இந்தியாவின் அறிவு தலைநகரமாக தமிழ்நாடு திகழ்வதாக கூறினார். அஸ்ட்ரா ஜெனிகாவின் உலகளாவிய மையம் நான்காயிரம் வேலைவாய்ப்புகளை அளிக்கக்கூடிய இடமாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் மீண்டும் முதலீடு செய்து வளர வேண்டும் என்ற அந்நிறுவனத்தின் முடிவு, தமிழ்நாட்டு மக்களின் திறமைக்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்கு பார்வையின் கீழ் உலகளாவிய, புதுமை மற்றும் வளர்ச்சியை ஈர்க்கும் தன்மையை தமிழ்நாடு தொடர்ந்து உருவாக்கி வருவதாகவும் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம் தெரிவித்துள்ளார்.

### 7ஆம் தேதி சிவகங்கை மாவட்ட அரசு குற்றவியல்

# வழக்கறிஞர் ஆ.அழகர்சாமி மகன் திருமணம்!

### அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் தலைமையில் நடைபெறுகிறது!

சிவகங்கை. ஜூலை 6-

சிவகங்கை மாவட்ட அரசு குற்றவியல் வழக்கறிஞர் ஆ.அழகர்சாமி. இவர் சிவகங்கை நகர கழக முன்னாள் செயலாளர். இவரது மகன் அ.கார்த்தி கேயன் - சிவகங்கை எஸ்.வீரமணி வீ.இராமாயி மகள் வீ.ஜோதீஸ்வரி ஆகியோரது திருமணம் நாளை (7ம் தேதி ஞாயிற்றுக். கிழமை) காலை 7:15 மணிக்கு மேல் 8.30 மணிக்குள் சிவகங்கை ராயல் மஹாலில் மாவட்ட கழகச் செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர். பெரிய கருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் முன்னிலையில் நடைபெறுகிறது .

நகர் கழகச் செயலாளர் சி. எம் .துரை.ஆனந்த் வரவேற்றுப் பேசுகிறார் . இந்த திருமணத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், அனைத்து கட்சி தலைவர்கள், கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திப் பேசுகிறார்கள்.

மணவிழாவிற்கான ஏற்பாடுகளை மாவட்ட அரசு குற்றவியல் வழக்கறிஞர் ஆ.அழகர்சாமி. ஆ.கதிரவன் திருமதி க. மதுபாலா மற்றும் உறவினர்கள் செய்து வருகிறார்கள்.

### ஒளிப்பதிவில் நிபுணத்துவம் பெற்ற ஒளிப்பதிவாளர்

# பத்மஸ்ரீ எஸ்.சந்தோஷ்சிவன் சிறப்பு கருத்தரங்கம்!

### தரமணி தமிழ்நாடு எம்.ஜி.ஆர். திரைப்படக் கல்லூரியில் நடைபெற்றது!

சென்னை, ஜூலை 6-

ஒளிப்பதிவில் நிபுணத்துவம் பெற்ற திரைப்பட ஒளிப்பதிவாளர் பத்மஸ்ரீ. எஸ்.சந்தோஷ் சிவன், ASC, ISC அவர்களின் சிறப்பு கருத்தரங்கம் சென்னை, தரமணியில் உள்ள தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக் காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் நேற்று (5.7.2024) நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக் காட்சிப் பயிற்சி நிறுவனம் மிகச்சிறப்பாக இயங்கி வருகின்றது. இந்நிறுவனத்தில் திரைப்படத்துறைக்கான கலை உணர்வுயையும், தொழில்நுட்ப பயிற்சிகளும் கருத்தியலாகவும் செயல்முறைகளாகவும் மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்தில் இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, படத்தொகுப்பு, உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் மற்றும் எண்மிய இடைநிலை ஆகிய ஆறு பிரிவுகளில் திரைப்படத் தொழில்நுட்பங்கள் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் பயின்ற மாணவர்கள் இன்றைய திரைத்துறை பிரபலங்களாகவும்,

Puna Film Institute, ISRO, National School of Drama, Sathayajitray Film Institute, Door dharsan போன்ற மிகச் சிறந்த நிறுவனங்களில் பணிபுரிந்தும் இந்தியாவிலுள்ள பல்வேறு திரைப்படக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களாகவும் இருந்து வருகின்றனர்.

இந்நிலையில், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் மாணவர்களின் பாடத்திட்டங்களில் ஒன்றாக நடத்தப்படும் முக்கிய திரைத்துறை ஆளுமைகளுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி நேற்று (05.07.2024) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், இந்திய அளவில் ஒளிப்பதிவாளர்களுக்கென பல்வேறு விருதுகளையும் குறிப்பாக ஒன்றிய அரசின் விருதுகளையும், தமிழ்நாடு அரசின் சார்ந்த ஒளிப்பதிவாளர்கள் விருதுகளையும் ஒளிப்பதிவாளர்களுக்கென சர்வதேச அங்கீகாரம் பெற்றவருமான பத்மஸ்ரீ. எஸ்.சந்தோஷ் சிவன்,ASC, ISC அவர்களுடனான கலந்துரையாடல் நடைபெற்றது. அவ்வமையம், மாணவர்களின் பல்வேறு கேள்விகளுக்குப் பதில் அளித்தும் ஒளிப்பதிவு பற்றியும், அதன் கூறுகள் பற்றியும், ஆவணத் திரைப்படம், குறும்படம் மற்றும் திரைப்பட பற்றியும் நுணுக்கங்களையும் எடுத்து கூறினார்.

இந்நிகழ்ச்சியின்போது, இந்நிறுவனத்தின் முன்னாள் மாணவர்களான ராஜீவ் மேனன், ஒளிப்பதிவாளர், இயக்குநர். திருமதி.பிரியா மற்றும் இயக்குநர் மற்றும் ஒளிப்பதிவாளருமான பிரேம் குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக, இந்நிறுவன முதல்வர் (மு.கூ.பொ) ஜெ.வே.மோகன கிருஷ்ணன் வரவேற்றதுடன், விருந்தினருக்கு சால்வை அணிவித்து கௌரவித்தார்.

### இராணிப்பேட்டை மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்

# பி.ஆர்.விமல் இல்லத் திருமண விழா!

### அமைச்சர் ஆர்.காந்தி - எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. வாழ்த்துரை!

அரக்கோணம், ஜூலை 6-

இராணிப்பேட்டை மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் பி.ஆர்.விமல், மேனகா விமல் ஆகியோரின் புதல்வர் வி.திருமூர்த்தி, ப.பாமினி ஆகியோரின் திருமண விழா 12.7.2024 வெள்ளிக்கிழமையன்று அரக்கோணத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவில் அமைச்சர் ஆர்.காந்தி, எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., மாநில சுற்றுச் சூழல் அணி துணைச் செயலாளர் ஆர். வினோத் காந்தி, ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., அரக்கோணம் நகரச் செயலாளர் வி.எல்.ஜோதி ஆகியோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மேலும் இம்மண விழாவில் அரக்கோணம் நகர கழக துணை செயலாளர் ஏ.அன்பு லாரன்ஸ் மற்றும் வி.எஸ்.ஆர்.ரவிச்சந்திரன், என்.அரிகிருஷ்ணன், எம்.கே.சிவா, பி.மூர்த்தி, ஏ.கே. சுந்தரமூர்த்தி, மு.கண்ணையன், ஜெயந்தி திருமூர்த்தி, எம்.பூபதி, அ.சோகன், எம். சிவானந்தம், துரை மஸ்தான், குமுதா குமார், ஏ.வி. சாரதி, லட்சுமி பாரதி, கலாவதி, அன்புலாரன்ஸ், எஸ். வினோத், கே.பி.வெங்கடேசன், ஆர்.தமிழ்ச்செல்வன், பெ.வடிவேலு உள்பட கழக அனைத்து அணித் தோழர்கள் கலந்துகொள்கின்றனர்.

### விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தல்

# காணை தெற்கு ஒன்றியத்தில், வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாக்கு சேகரிக்கிறார்!

### அமைச்சர்கள் க.பொன்முடி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் கௌதம சிகாமணி, லட்சுமணன் பங்கேற்பு!

### மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!



விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆசிபெற்ற, இந்தியா கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா அவர்களை ஆதரித்து 07.07.2024 ஞாயிற்றுகிழமை மாலை 5 மணிக்கு இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காணை தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பொதுமக்களிடம் வாக்கு சேகரிக்கும் பணி மேற்கொள்கிறார்.

மேலும் உயர் கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் பொன் கௌதம சிகாமணி, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். லட்சுமணன் ஆகியோருடன் சேர்ந்து சென்னை மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக நிர்வாகிகள் அனைவரும் உள்ளூர் நிர்வாகிகளுடன் இணைந்து பிரச்சார்த்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**இடம் : காணை தேர்தல் பணிமனை**

**நேரம்: மாலை 5 மணி**

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.





எழும்பூர் சட்டமன்றத் தொகுதி மண்டலம்–8 மாநகராட்சி, வார்டு எண்.108, சேத்துப்பட்டு தாஸ்புரம் பகுதியில் மழைநீர் வடிகால் அமைப்பது தொடர்பாக சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல துணை ஆணையர் ஜே.ஜே.பிரவின் குமார் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய மண்டலக் கண்காணிப்புப் பொறியாளர், மண்டல அலுவலர், செயற் பொறியாளர், உதவி செயற் பொறியாளர், உதவிப் பொறியாளர் உள்ளிட்ட அதிகாரிகளோடு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வின்போது எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், தெற்குப் பகுதி மாணவர் அணி துணை அமைப்பாளர் அ.குருமூர்த்தி, 108அ வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 108வது வட்ட இளைஞர் துணை அமைப்பாளர் மணிகண்டன், 108வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ்குமார், வட்டச் செயற்குழு உறுப்பினர்கள் பெ.பிரவீண்குமார், ஜி.ராஜரத்தினம், பா.ஆனந்த், பாக முகவர்கள் கு.பிரவீண்குமார், செந்தில் மற்றும் செ.சுந்தர், கே.ஏ.பிரதாப், பெ.பிரேம், ஆர்.வேலு, பு.விஷால், ஜெ.ஜெயகுமார், ஆ.ஜெகன், அ.தினகரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### ரூ.100 கோடி மதிப்பிலான நில அபகரிப்பு வழக்கு - தலைமறைவான

# முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் வீட்டில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் சோதனை!

கரூர், ஜூலை 6-

100 கோடி ரூபாய் நில அபகரிப்பு வழக்கில், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் வீடு மற்றும் அவரது ஆதரவாளர்கள் வீடுகளில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் சோதனை நடத்தி வருகின்றனர்.

கரூரில் 100 கோடி மதிப்பிலான 22 ஏக்கர் நில அபகரிப்பு வழக்கில், முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் தொடர்ந்து தலைமறைவாக உள்ளார். சி.பி.சி.ஐ.டி. போலீசார் வழக்கை விசாரித்து வரும் நிலையில், எந்தநேரமும் தாம் கைது செய்யப்படலாம் என்று கருதி, எம்.ஆர். விஜய பாஸ்கர் தொடர்ந்து தலைமறைவாகவே உள்ளார்.

இந்நிலையில், அவரது வீடு மற்றும் ஆதரவாளர்கள் வீடுகளில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் சோதனை நடத்தி வருகின்றனர். வழக்கில் தொடர்புடைய தாளப்பட்டி கிராமத்தில் உள்ள யுவராஜ், தோட்டக்குறிச்சி கிராமத்தில் உள்ள செல்வராஜ் ஆகியோர் வீடுகளில் சோதனை நடைபெற்று வருகிறது.



விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து பெரம்பூர் பகுதிக் கழகத்திற்காக ஒதுக்கப்பட்ட பாகம் 135 – வேலியந்தல் கிராமத்தில் பொறியாளர் அணி மாநில துணைச் செயலாளர் இரா.நரேந்திரன் தலைமையில் கழகத்தினர் வாக்கு சேகரித்தனர். நிகழ்ச்சியை மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., தொடங்கி வைத்தார். நிகழ்ச்சிக்கு பகுதிச் செயலாளர்கள் க. ஜெயராமன், அ.முருகன், மாவட்டப் பொருளாளர் வி.தயாளன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் டி.கமலக்கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் கோ. சதீஷ், எஸ்.மோகன்ராஜ், க.ராஜசேகர், பரத், டி.கஜேந்திரன், பி.சசிகுமார், என்.சீனி, டி.பாபு, ஜெ.பிரபு, வெள்ளை வினோத் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.